3. விதி 110–ன்கீழ் அறிக்கை

சங்கிலிப் பறிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்களைப் பிடிக்க முற்பட்டு பலியான ஓசூர் நகர காவல் நிலைய தலைமை காவலர் திரு. முனுசாமி அவர்களின் குடும்பத்தினருக்கு ஒரு கோடி ரூபாய் நிவாரண உதவி குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், யு.சிங்கிரிபள்ளி என்னும் இடத்தில் 15–6–2016 அன்று நடந்த சங்கிலிப் பறிப்பு சம்பவம் தொடர்பாக, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் நகர காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. கண்ணன், தலைமை காவலர்கள் திரு. முனுசாமி, திரு. தனபால், சிப்காட் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. நாகராஜ் ஆகியோர் அடங்கிய குழுவினர், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், பாரதிதாசன் நகர் அருகே செயின் பறிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்ட நபர்களைப் பிடிக்க முற்படும்பொழுது, அவர்கள் கத்தியால் தாக்கியதில் ஓசூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. முனுசாமி என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன். இந்தத் துயரச் சம்பவத்தால் மிகவும் மனவேதனைக்கு ஆளாகிய நான், உயிரிழந்த திரு. முனுசாமி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டதுடன், ஐந்து இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கவும் உத்தரவிட்டிருந்தேன்.*

தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி, ஐந்து இலட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டிருந்தாலும், கொள்ளையரைப் பிடிக்கும் முயற்சியில் உயிரிழந்த திரு. முனுசாமி அவர்களின் குடும்பத்தினருக்கு இது போதுமான நிவாரணமாகாது என்பதே எனது திடமான கருத்தாகும். எனவே, திரு. முனுசாமி அவர்களின் உயரிய தியாகத்தை கருத்தில்கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு நிவாரண உதவியாக ஒரு கோடி ரூபாய் வழங்க நான்

உத்தரவிட்டுள்ளேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், இதுபோன்ற வீர, தீர செயல்களில் உயிரிழப்பு அல்லது பலத்த காயங்களுக்கு உள்ளாகும் காவல் துறையினருக்கு வழங்கப்பட வேண்டிய கருணைத் தொகையை உயர்த்தி நிர்ணயிக்கவும், அதற்காக தற்போதுள்ள அரசாணையை மாற்றி, புதிய அரசாணையை வெளியிடவும் தலைமைச் செயலருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், உயிரிழந்த திரு. முனுசாமி அவர்களின் மகள் செல்வி ரக்ஷனா அவர்களின் உயர் கல்வி செலவை தமிழக அரசே ஏற்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி அவர்கள்.

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் ஐந்தாவது முறையாக என்னைப் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், 1957–லிருந்து 2016 வரை ஒரு முறைகூட தோல்வியைக் காணாமல் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், *(மேசையைத் தட்டும் ஒலி)* சமீபத்தில் தமிழகத்தில் தேர்தல் நடைபெற்ற 232 தொகுதிகளில், தான் போட்டியிட்ட தொகுதியில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிற எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* என்னுடைய உளமார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்கின்றேன். அதேவேளையில், நமக்கு நாமே பயணத்தின்மூலம் தமிழகத்து மக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்கி, *(மேசையைத் தட்டும் ஒலி)* வளருகின்ற இளம் தலைவர்களினிடையே ஓர் உன்னத இடத்தைப் பிடித்திருக்கிற எதிர்க்கட்சித் தலைவர், அன்பிற்குரிய தளபதி அவர்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* தலைவர் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–40

அதுமட்டுமன்றி, திருக்கோவிலூர் தொகுதியில் போட்டியிட்ட என்னை 41,067 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த